# தேவாரம் 229 - திருவையாறு

| | Song | பாடல் | thirumuRai Reference |
|---|---|---|---|
| 01 | paNi~ndhavar aruvinai | பணிந்தவர் அருவினை | 1.120.1 (# 1293) |
| 02 | ~nalamali ~njAnasamba~ndha | நலமலி ஞானசம்பந்த | 1.120.11 (# 1303) |
| 03 | pulanai~ndhum poRikala~nggi | புலனைந்தும் பொறிகலங்கி | 1.130.1 (# 1394) |
| 04 | annamali pozhil | அன்னமலி பொழில் | 1.130.11 (# 1404) |
| 05 | mAdharp piRaikkaNNiyAnai | மாதர்ப் பிறைக்கண்ணியானை | 4.3.1 (# 4179) |
| 06 | vaLarmadhik kaNNiyinAnai | வளர்மதிக் கண்ணியினானை | 4.3.11 (# 4189) |
| 07 | ga~nggaiyaic cadaiyuL | கங்கையைச் சடையுள் | 4.38.1 (# 4532) |
| 08 | sagamalAdhadimai | சகமலாதடிமை | 4.40.8 (# 4559) |
| 09 | si~ndhippariyana | சிந்திப்பரியன | 4.92.1 (# 5041) |
| 10 | kaLiththuk kala~ndhadhor | களித்துக் கலந்ததொர் | 4.92.7 (# 5047) |
| 11 | utRArilAdhArkku | உற்றாரிலாதார்க்கு | 4.92.13 (# 5053) |
| 12 | Odhiya ~njAnamum | ஓதிய ஞானமும் | 4.92.17 (# 5057) |
| 13 | ~ne~njjam enbadhOr | நெஞ்சம் என்பதோர் | 5.27.3 (# 5495) |
| 14 | virumbum vaNNamum | விரும்பும் வண்ணமும் | 5.28.7 (# 5509) |
| 15 | OsaiyoliyelAm | ஓசையொலியெலாம் | 6.38.1 (# 6623) |
| 16 | utRiru~ndha uNarvelAm | உற்றிருந்த உணர்வெலாம் | 6.38.6 (# 6628) |
| 17 | ellAvulagamum | எல்லாவுலகமும் | 6.38.7 (# 6629) |
| 18 | paravum parisu | பரவும் பரிசு | 7.77.1 (# 8005) |
| 19 | kUdi adiyAr iru~ndhAlum | கூடி அடியார் இருந்தாலும் | 7.77.11 (# 8015) |
| 20 | kaiyAl thozhudhu | கையால் தொழுது | 8 - p 465 (# 425) (Asaip paththu) |
| 21 | kaiyAr vaLai silamba | கையார் வளை சிலம்ப | 8 - p 274 (# 187) (thiru ammAnai) |
| 22 | malaiyaththagaththu | மலையத்தகத்து | 11 - 981 |
| 23 | thozhudhezhu~ndha | தொழுதெழுந்த | 12 - 1634 |
| 24 | veLLi veRpinmEl | வெள்ளி வெற்பின்மேல் | 12 - 1644 |
| 25 | endRum inbam | என்றும் இன்பம் | 12 - 4281 |
| 26 | idaiyaRAp pEranbum | இடையறாப் பேரன்பும் | mAdhavac civa~njAna munivar |

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு: திருவிராகம்** | பாடல் | **திருஞான சம்பந்தர்** | |
| பண்: | **வியாழக் குறிஞ்சி** | ராகம்: | **சௌராஷ்டிரம்** | |
| திருமுறை # | **1.120.1** | பாடல் | **பணிந்தவர் அருவினை** | # 1293 |

பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் றோலொடு நூல்துதை மார்பினில்

பிணிந்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநக ரந்த ணையாறே.

பணிந்தவர் அருவினை பற்று அறுத்து அருள் செயத்
துணிந்தவன் தோலொடு நூல் துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேர் எழில் ஆமை கொண்டு
அணிந்தவன் வள நகர் அம் தண் ஐயாறே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு: திருவிராகம்** | பாடல் | **திருஞான சம்பந்தர்** | |
| பண்: | **வியாழக் குறிஞ்சி** | ராகம்: | **சௌராஷ்டிரம்** | |
| திருமுறை # | **1.120.11** | பாடல் | **நலமலி ஞானசம்பந்த** | # 1303 |

நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
அலைமலி புனல்மல்கு மந்தணை யாற்றினை
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே.

நல[ம்] மலி ஞான சம்பந்தனது இன் தமிழ்
அலை மலி புனல் மல்கும் அம் தண் ஐயாற்றினை
கலை மலி தமிழ் இவை கற்று வல்லார் மிக
நல[ம்] மலி புகழ் மிகு நன்மையர்தாமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருஞான சம்பந்தர்** | |
| பண்: | **மேகராகக் குறிஞ்சி** | ராகம்: | **நீலாம்பரி** | |
| திருமுறை # | **1.130.1** | பாடல் | **புலனைந்தும் பொறிகலங்கி** | # 1394 |

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே.

புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவு அழிந்திட்டு ஐ மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள் செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடம் ஆட முழவு அதிர மழை என்று அஞ்சிச்
சில மந்தி அலமந்து மரம் ஏறி முகில் பார்க்கும் திருவையாறே.

ஸ்தலம் **திருவையாறு** பாடல் **திருஞான சம்பந்தர்**
பண்: **மேகராகக் குறிஞ்சி** ராகம்: **நீலாம்பரி**
திருமுறை # **1.130.1** பாடல் **புலனைந்தும் பொறிகலங்கி** # 1394

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம் பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென்று எய்துவார் தாழாதன்றே.

அன்ன[ம்] மலி பொழில் புடை சூழ் ஐயாற்று எம் பெருமானை அம் தண் காழி
மன்னிய சீர் மறை நாவன் வளர் ஞான சம்பந்தன் மருவு பாடல்
இன் இசையால் இவை பத்தும் இசையுங்கால் ஈசன் அடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமர் உலகில் தவ நெறி சென்று எய்துவார் தாழாது அன்றே.

ஸ்தலம் **திருவையாறு** பாடல் **திருநாவுக்கரசர்**
பண்: **காந்தாரம்** ராகம்: **நவரோஸ்**
திருமுறை # **4.3.1** பாடல் **மாதர்ப்பிறை** # 4179

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப் பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன்.

ஸ்தலம் **திருவையாறு** பாடல் **திருநாவுக்கரசர்**
பண்: **காந்தாரம்** ராகம்: **நவரோஸ்**
திருமுறை # **4.3.11** பாடல் **வளர்மதிக் கண்ணியினானை** # 4189

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைகணிக் கின்றேன்

அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

வளர் மதிக் கண்ணியினானை வார் குழலாளொடும் பாடிக்
களவு படாததொர் காலம் காண்பான் கடைகணிக்கின்றேன்
அளவு படாததொர் அன்போடு ஐயாறு அடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருநேரிசை** | ராகம்: | **நவரோஸ்** | |
| திருமுறை # | **4.38.1** | பாடல் | **கங்கையைச் சடையுள்** | # 4532 |

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப்பொறி யரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையி லனலும் வைத்தா ரையனை யாற னாரே.

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப் பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான் மறி மழுவும் வைத்தார்
அங்கையில் அனலும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருநேரிசை** | ராகம்: | **நவரோஸ்** | |
| திருமுறை # | **4.40.8** | பாடல் | **சகமலாதடிமை** | # 4559 |

சகமலா தடிமை யில்லை தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை யையனை யாற னார்க்கே.

சகம் அலாது அடிமை இல்லை தான் அலால் துணையும் இல்லை
நகம் எலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகம் எலாம் கண்ணீர் மல்க முன் பணிந்து ஏத்தும் தொண்டர்
அகம் அலால் கோயில் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருவிருத்தம்** | ராகம்: | **பைரவி** | |
| திருமுறை # | **4.92.1** | பாடல் | **சிந்திப்பரியன** | # 5041 |

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே.

சிந்திப்பு அரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்து இருண்டு
பந்தித்து நின்ற பழ வினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித் தலமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருவிருத்தம்** | ராகம்: | **சங்கராபரணம்** | |
| திருமுறை # | **4.92.7** | பாடல் | **களித்துக் கலந்ததொர்** | # 5047 |

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றயிப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும்-ஐ யாற னடித்தலமே.

களித்துக் கலந்ததொர் காதல் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன் னின்ற இப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவை அமுது ஊட்டி அமரர்கள் சூழ் இருப்ப
அளித்துப் பெரும் செல்வம் ஆக்கும் ஐயாறன் அடித் தலமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருவிருத்தம்** | ராகம்: | **சங்கராபரணம்** | |
| திருமுறை # | **4.92.13** | பாடல் | **உற்றாரிலாதார்க்கு** | # 5053 |

உற்றா ரிலாதார்க் குறுதுணை யாவன ஓதிநன்னூல்
கற்றால் பரவப் பெருமை யுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்க-ஐ யாற னடித்தலமே.

உற்றார் இலாதார்க்கு உறுதுணை ஆவன ஓதி நல் நூல்
கற்றால் பரவப் பெருமை உடையன காதல் செய்யகிற்பார்
தமக்குக் கிளர் ஒளி வானகம் தான் கொடுக்கும்
அற்றார்க்கு அரும் பொருள் காண்க ஐயாறன் அடித் தலமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருவிருத்தம்** | ராகம்: | **சங்கராபரணம்** | |
| திருமுறை # | **4.92.17** | பாடல் | **ஓதிய ஞானமும்** | # 5057 |

ஓதிய ஞானமும் ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மான-ஐ யாற னடித்தலமே.

ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலி சிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும் ஆவன விண்ணு[ம்] மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூ மதியோடு
ஆதியும் அந்தமும் ஆன ஐயாறன் அடித் தலமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருக்குறுந்தொகை** | ராகம்: | **மாயாமாளவ கௌளை** | |
| திருமுறை # | **5.27.3** | பாடல் | **நெஞ்சம் என்பதோர்** | # 5495 |

நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத்
தஞ்சுந் தோன்ற அருளுமை யாறரே.

நெஞ்சம் என்பதோர் நீள்கயம் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டு நான்
துஞ்சும் போழ்து நின் நாமத் திரு எழுத்து
அஞ்சும் தோன்ற அருளும் ஐயாறரே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருக்குறுந்தொகை** | ராகம்: | **மாயாமாளவ கௌளை** | |
| திருமுறை # | **5.28.7** | பாடல் | **விரும்பும் வண்ணமும்** | # 5509 |

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவரை யாறரே.

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன் மொழிக் காரிகை வண்ணமும்
விரும்புவார் வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமும் ஆவர் ஐயாறரே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருத்தாண்டகம்** | ராகம்: | **ஹரிகாம்போதி** | |
| திருமுறை # | **6.38.1** | பாடல் | **ஓசையொலியெலாம்** | # 6623 |

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் னின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயெ
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலர் எலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் னின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடி என் மேல் வைத்தாய் நீயெ
தேச விளக்கு எலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொன் சோதீ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருத்தாண்டகம்** | ராகம்: | **ஹரிகாம்போதி** | |
| திருமுறை # | **6.38.6** | பாடல் | **உற்றிருந்த உணர்வெலாம்** | # 6628 |

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே

உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாய்-அவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

உற்றிருந்த உணர்வு எ[ல்]லாம் ஆனாய் நீயே
உற்றவர்க்கு ஓர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞானம் ஆனாய் நீயே
கற்றவர்க்கு ஓர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாய் அவளின் நல்லாய் நீயே
பிரானாய் அடி என் மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திரு நீல கண்டன் நீயே
திருவையாறு அகலாத செம்பொன் சோதீ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருத்தாண்டகம்** | ராகம்: | **ஹரிகாம்போதி** | |
| திருமுறை # | **6.38.7** | பாடல் | **எல்லாவுலகமுமா** | # 6629 |

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொன் சோதீ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **சுந்தரர்** | |
| பண்: | **காந்தார பஞ்சமம்** | ராகம்: | **கேதார கௌளை** | |
| திருமுறை # | **7.77.1** | பாடல் | **பரவும் பரிசு** | # 8005 |

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாளை (/லை?)
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ.

பரவும் பரிசு ஒன்று அறியேன் நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன் நான்
கரவில் அருவி கமுகு உண்ணத் தெங்கம் குலைக் கீழ்க் கருப்பாளை (/லை?)
அரவம் திரைக் காவிரிக்கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **சுந்தரர்** | |
| பண்: | **காந்தார பஞ்சமம்** | ராகம்: | **கேதார கௌளை** | |
| திருமுறை # | **7.77.111** | பாடல் | **கூடி அடியார் இருந்தாலும்** | # 8015 |

கூடி அடியா ரிருந்தாலுங் குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி யிருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்குங் காண்கிலேன் திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ.

கூடி அடியார் இருந்தாலும் குணம் ஒன்று இல்லீர் குறிப்பு இல்லீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்கும் காண்கிலேன் திருவாரூரே சிந்திப்பன்
ஆடும் திரைக் காவிரிக்கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **ஆசைப் பத்து (ஆத்தும இலக்கணம்)** | பாடல் | **மானிக்கவாசகர்** | |
| பண்: | | ராகம்: | **மோஹனம்** | |
| திருமுறை # | **8 திருவாசகம்** | பாடல் | **கையால் தொழுது** | # 425 |

கையால் தொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்டு
எய்யா தென்றன் தலைமேல் வைத்தெம் பெருமான் பெருமானென்று

ஐயா என்றன் வாயா லரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

கையால் தொழுது உன் கழல் சேவடிகள் கழுமத் தழுவிக்கொண்டு
எய்யாது என்தன் தலை மேல் வைத்து எம்பெருமான் பெருமான் என்று
ஐயா என்தன் வாயால் அரற்றி அழல் சேர் மெழுகு ஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திரு அம்மானை** | பாடல் | **மாணிக்கவாசகர்** | |
| பண்: | | ராகம்: | **மோஹனம்** | |
| திருமுறை # | **8 திருவாசகம்** | பாடல் | **கையார் வளை சிலம்ப** | # 187 |

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் படுதுங்காண் அம்மானாய்.

கை ஆர் வளை சிலம்பக் காது ஆர் குழை ஆட
மை ஆர் குழல் புரளத் தேன் பாய வண்டு ஒலிப்பச்
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்து அறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் படுதும் காண் அம்மானாய்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி** | பாடல் | **பட்டினத்துப் பிள்ளையார்** | |
| பண்: | | ராகம்: | **தேஷ்** | |
| திருமுறை # | **11.4.56** | பாடல் | **கையார் வளை சிலம்ப** | # 981 |

மலையத் தகத்தியன் அர்ச்சிக்க மன்னி வடகயிலை
நிலையத் தமரர் தொழ-இருந் தான்நெடு மேருஎன்னும்
சிலையத்தன் பைம்பொன் மதில்திரு ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு ஐயாற் றருமணியே.

மலையத்து அகத்தியன் அர்ச்சிக்க மன்னி வட கயிலை

நிலையத்து அமரர் தொழ இருந்தான் நெடு மேரு என்னும்
சிலையத்தன் பைம்பொன் மதில் திரு ஏகம்பத்தான் திகழ் நீர்
அலையத் தடம் பொன்னி சூழ் திரு ஐயாற்று அரு மணியே.

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | பாடல் | **சேக்கிழார்** | |
| பண்: | ராகம்: | **மத்யமாவதி** | |
| திருமுறை # **12** திருத்தொண்டர் புராணம் **(பெரிய புராணம்)** | பாடல் | **தொழுதெழுந்த** | # 1634 |

தொழுதெ ழுந்தநற் றொண்டரை நோக்கிவிண்தலத்தில்
எழுபெ ருந்திரு வாக்கினால் இறைவர் இப்பொய்கை
முழுகி நம்மைநீ கயிலையில் இருந்த-அம் முறைமை
பழுதில் சீர்த்திரு வையாற்றிற் காண் எனப் பணித்தார்.

தொழுது எழுந்த நல் டொண்டரை நோக்கி விண் தலத்தில்
எழு பெரும் திரு வாக்கினால் இறைவர் இப் பொய்கை
முழுகி நம்மை நீ கயிலையில் இருந்த அம் முறைமை
பழுது இல் சீர்த் திருவையாற்றில் காண் எனப் பணித்தார்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | பாடல் | **சேக்கிழார்** | |
| பண்: | ராகம்: | **மத்யமாவதி** | |
| திருமுறை # **12** திருத்தொண்டர் புராணம் **(பெரிய புராணம்)** | பாடல் | **வெள்ளி வெற்பின்மேல்** | # 1644 |

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பென-இடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேர் ஒளிப் பவள வெற்பு என இடப் பாகம்
கொள்ளு[ம்] மா மலையாளுடன் கூட வீற்று இருந்த
வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னவனார்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | பாடல் | **சேக்கிழார்** | |
| பண்: | ராகம்: | **சுருட்டி** | |
| திருமுறை # **12** திருத்தொண்டர் புராணம் | பாடல் | **என்றும் இன்பம்** | # 4281 |

(பெரிய புராணம்)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று உ[ள்]ளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகு எ[ல்]லாம்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | | பாடல் | **மாதவச் சிவஞான முனிவர்** |
| பண்: | **வியாழக் குறிஞ்சி** | ராகம்: | **சௌராஷ்ட்ரம்** |
| திருமுறை # | **திருநாவுக்கரசர் துதி** | பாடல் | **இடையறாப் பேரன்பும்** # |

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறத் திருக்கரமும் சிவெபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசர் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்.

இடை அறாப் பேர் அன்பும் மழை வாரும் இணை விழியும் உழவாரத்தின்
படை அறத் திருக் கரமும் சிவெ பெருமான் திரு அடிக்கே பதித்த நெஞ்சும்
நடை அறாப் பெரும் துறவும் வாகீசர் பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடை அறாச் செவ் வாயும் சிவ வேடப் பொலிவு அழகும் துதித்து வாழ்வாம்.

**365-366 பல திருமுறைகள் pala thirumuRaigaL Various thirumuRais**

| | Song | பாடல் | thirumuRai Reference |
|---|---|---|---|
| 01 | maRaiyavan | மறையவன் | 1.125.5 (# 1352) |
| 02 | sAmbalaip pUsi | சாம்பலைப் பூசி | 4.110.1 (# 5189) |
| 03 | vAna ~nAdanE | வான நாடனே | 7.70.9 (# 7941) |
| 04 | kuRaivilA ~niRaivE | குறைவிலா நிறைவே | 8 (# 392) p-435 |
| 05 | oLivaLar viLakkE | ஒளிவளர் விளக்கே | 9-1 |
| 06 | Ega ~nAyaganai | ஏக நாயகனை | 9-46 |
| 07 | pavaLamE magudam | பவளமே மகுடம் | 9-95 |
| 08 | paththiyAy uNarvOr | பத்தியாய் உணர்வோர் | 9-184 |
| 09 | muththIyALar ~nAnmaRaiyar | முத்தீயாளர் நான்மறையர் | 9-197 |
| 10 | thillai ~nadam payilum | தில்லை நடம் பயிலும் | 9-209 |
| 11 | pavaLa mAl varaiyai | பவள மால் வரையை | 9-226 |
| 12 | thillai ambalaththu e~nggaL | தில்லை அம்பலத்து எங்கள் | 9-262 |
| 13 | mAdhOr kURan | மாதோர் கூறன் | |
| 14 | ara ara enna ariyadhu | அர அர என்ன அரியது | 10-916 |
| 15 | mUlan urai seydha | மூலன் உரை செய்த | 10-3046 |
| 16 | madhimali purisai | மதிமலி புரிசை | 11-1 |
| 17 | thuththam kaikkiLLai | துத்தம் கைக்கிள்ளை | 11-10 |
| 18 | illum poruLum | இல்லும் பொருளும் | 11-158 |
| 19 | pon vaNNam | பொன் வண்ணம் | 11-169 |
| 20 | varamAvadhellAm | வரமாவதெல்லாம் | 11-400 |
| 21<br>22 | kOsarikku andRu<br>matRai oNthiru~nayanam | கோசரிக்கு அன்று<br>மற்றை ஒண்திருநயனம் | 11-514 (lines 24-38) |
| 23 | thiruvAkkum seykarumam | திருவாக்கும் செய்கருமம் | 11-515 |
| 24 | thIyAna mEniyanE | தீயான மேனியனே | 11-769 |
| 25 | vEdhiyar peruma | வேதியர் பெரும | 11-800 |
| 26 | mozhiyin maRai mudhalE | மொழியின் மறை முதலே | 11-810 |
| 27 | meyththoNdar | மெய்த்தொண்டர் | 11-926 |
| 28 | ennai ~ninai~ndhu adimai | என்னை நினைந்து அடிமை | 11-1036 |
| 29 | ulagelAm uNar~ndhu | உலகெலாம் உணர்ந்து | 12-1 |
| 30 | thiru~njAna samba~ndhar | திருஞான சம்பந்தர் | |
| 31 | vaiyam ~nIduga | வையம் நீடுக | |

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | **திருச்சிவபுரம்: திருவிராகம்** | பாடல் | **திருஞான சம்பந்தர்** |
| பண்: | **வியாழக்குறிஞ்சி** | ராகம்: | |
| திருமுறை # | **1.125.5** | பாடல் | **மறையவன் மதியவன்** # 1352 |

மறையவன் மதியவன் மலையவன் நிலையவன்
நிறையவ னுமையவள் மகிழ்நட நவில்பவன்
இறையவ னிமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவ னெமையுடை யவனே.

மறை அவன் மதி அவன் மலை அவன் நிலை அவன்
நிறை அவன் உமையவள் மகிழ் நட[ம்] நவில்பவன்
இறை அவன் இமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவு என உடையவன் எமை உடையவனே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **பசுபதி: திருவிருத்தம்** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | | ராகம்: | | |
| திருமுறை # | **4.110.1** | பாடல் | **சாம்பலைப் பூசித்** | # 5189 |

சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்பரவி
ஏம்பலிப் பார்கட் கிரங்குகண் டாயிருங் கங்கையென்னும்
காம்பலைக் கும்பணைத் தோளி கதிர்ப்பூண் வனமுலைமேல்
பாம்பலைக் குஞ்சடை யாயெம்மை யாளும் பசுபதியே.

சாம்பலைப் பூசித் தரையில் புரண்டு நின் தாள் பரவி
ஏம்பலிப்பார்கட்கு இரங்கு கண்டாய் இரும் கங்கை என்னும்
காம்பலைக்கும் பணைத் தோளி கதிர்ப் பூண் வன முலை மேல்
பாம்பு அலைக்கும் சடையாய் எம்மை ஆளும் பசுபதியே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவாவடுதுறை** | பாடல் | **சுந்தரர்** | |
| பண்: | **தக்கேசி** | ராகம்: | | |
| திருமுறை # | **7.70.9** | பாடல் | **வான நாடனே** | # 7941 |

வான நாடனே வழித்துணை மருந்தே
        மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாஎயி றாமையும் எலும்பும்
        ஈடு தாங்கிய மார்புடை யானே
தேன்நெய் பால்தயி ராட்டுகந் தானே
        தேவ னேதிரு வாவடு துறையுள்
ஆனை யேயெனை யஞ்சலென் றருளாய்
        யாரெ னக்குற வமரர்க ளேறே.

வான நாடனே வழித் துணை மருந்தே
    மாசு இ[ல்]லா மணியே மறைப் பொருளே
ஏன மா எயிறு ஆமையும் எலும்பும்
    ஈடு தாங்கிய மார்பு உடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே
    தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எ[ன்]னை அஞ்சல் என்று அருளாய்
    ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **கோயில் திருப்பதிகம் (அநுபோக இலக்கணம்)** | பாடல் | **மாணிக்க வாசகர்** | |
| பண்: | | ராகம்: | | |
| திருமுறை # | **8 (திருவாசகம்)** | பாடல் | **குறைவிலா நிறைவே** | # 392 |

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
    ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
    மனத்திடை மன்னிய மன்னே
சிறைபொறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
    திருப்பெருந் துறையுறை சிவனே
இறையவனே நீயென் உடலிடங் கொண்டாய்
    இனியுன்னை யென்னிரக் கேனே.

குறைவு இ[ல்]லா நிறைவே கோது இ[ல்]லா அமுதே
    ஈறு இ[ல்]லாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையும் ஆய் மறையின் பொருளும் ஆய் வந்து என்
    மனத்து இடை மன்னிய மன்னே
சிறை பொறா நீர் போல் சிந்தைவாய்ப் பாயும்
    திருப்பெருந்துறை உறை சிவனே
இறையவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
    இனி உன்னை என் இரக்கேனே.

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**1. திருமாளிகைத்தேவர் அருளிய திருவிசைப்பா**
**1. கோயில் - ஒளி வளர் விளக்கே**

1.
ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
    உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !

தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**2. சேந்தனார் அருளிய திருவிசைப்பா**
1. **திருவீழிமிழலை**
46.
ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வ[ண்]ணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 1

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**3. கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா**
**2. திருக்களந்தை ஆதித்தேச்சரம்**
95.
பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம்(பு) அதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவம்
துவளு[ம்]மே கலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 5

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**4. பூந்துருத்திநம்பி காடநம்பி அருளிய திருவிசைப்பா**
**1. திருவாரூர்**
184.
பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்

பருகுதோ(று)[ம்] அமுதம்ஒத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் ! இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆருர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே. 2

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**5. கண்டராதித்தர் அருளிய திருவிசைப்பா**
**கோயில் - மின்னார் உருவம்**
197.
முத்தீ யாளர் நான் மறையர் மூவா யிர வர்நின்னோ(டு)
ஒத்தே வாழும் தன்மை யாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்றன் ஆடல் காண அணைவதும் என்றுகொலோ? 3

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**6. வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா**
**கோயில் - துச்சான**
209.
நின்று[ம்]நினைந்(து)[ம்] இருந்து[ம்]கிடந்து[ம்] எழுந்து[ம்]தொழும்
தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா(து) இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ? திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 5

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**7. திருவாலியமுதனார் அருளிய திருவிசைப்பா**
**2. கோயில் - பவளமால்வரை**
226.
பவளமால் வரையைப் பனிபடர்ந்(து) அனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லை யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே. 1

**ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா**
**8. புருடோத்தம நம்பி அருளிய திருவிசைப்பா**
**1. கோயில் - வாரணி**
262.
தில்லையம் பலத்தெங்கள் தேவ தேவைத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லைய தாகிய எழில்கொள் சோதி
என்னுயிர் காவல்கொண் டிருந்த எந்தாய்
பல்லையார் பக(/சு?)ந்தலை யோ(டு) இடறிப்
பாதமென் மலரடி நோவ நீபோய்
அல்லினில் அருநடம் ஆடில் எங்கள்
ஆருயிர் காவலிங்(கு) அரிது தானே. 6

**மாதோர் கூறன் - ????**

திருமந்திரம் **(10th thirumuRai)**
நான்காம் தந்திரம்
சித்த ஆகமம்
2. திருஅம்பலச் சக்கரம
916.
அரகர என்ன அரியதொன்று இல்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப்பு அன்றே. 3

திருமந்திரம் **(10th thirumuRai)**
ஒன்பதாம் தந்திரம்
22. சர்வ வியாபி
3046
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே. 21

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**1.1 திரு ஆலவாய் உடையார் அருளிச் செய்த திருமுகப் பாசுரம்**
1. மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில் 1

மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்

தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**2.1 காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த**
**திருஆலங்காட்டு மூத்த திருப்பதிகம் - 1**

10. துத்தங் கைக்கிள்ளை விளரிதாரம் உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதம் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல் தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடும்எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே. 9

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**3.1 ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச் செய்த**
**திருக்கோயில் திருவெண்பா (க்ஷேத்திரத் திருவெண்பா)**

158. இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து. 14

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**4.1 சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த**
**பொன்வண்ணத்தந்தாதி**

169. பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே. 1

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**5.1 நக்கீரதேவ நாயனார் அருளிச் செய்த**
**கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி**

400 வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமாஉன் பாதார விந்தம் - சிரமார
ஏத்திடும்போ தாகவந் தென்மனத்தில் எப்பொழுதும்
வைத்திடுநீ வேண்டேன்யான் மற்று. 99

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**6.1 கல்லாடதேவ நாயனார் அருளிச் செய்த**
**திருக்கண்ணப்பதேவர் திருமறம்**

கொண்டு கானப் பேருறை கண்ணுதல்

முடியிற் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக்கு அன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக்கு ஒருகணில் உதிரம்
தக்கி ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்
நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே.

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**7.1 கபிலதேவ நாயனார் அருளிச் செய்த**
**மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை**

515. (வெண்பா)
திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. 1

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**8.1 பரணதேவ நாயனார் அருளிச் செய்த**
**சிவபெருமான் திருவந்தாதி**

769 தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே - தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராயென்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர். 98

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**9.1 இளம்பெருமான் அடிகள் அருளிச் செய்த**
**சிவபெருமான் திருமும்மணிக்கோவை**

800 வேதியர் பெரும விண்ணோர் தலைவ
ஆதி நான்முகத் தண்ட வாண
செக்கர் நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடும்
நாவலம் பெருமை நல்குவோய் எனவே. 28

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**10.1 அதிரா அடிகள் அருளிச் செய்த**
**மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை**

810 மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே -தெழிய 8

கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு.

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**11.4 பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த**
**திருஏகம்பமுடையார் திருவந்தாதி**

926 மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண் டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோகச்சி ஏகம்பனே. 1

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**12.1 நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த**
**திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை**

1036 என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | | பாடல் | **சேக்கிழார்** |
| பண்: | | ராகம்: | |
| திருமுறை # | **12** திருத்தொண்டர் புராணம் **(பெரிய புராணம்)** | பாடல் | **உலகெலாமுணர்ந்து** # 1 |

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகு எ[ல்]லாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.

## பன்னிரு திருமுறைகள் panniru thirumuRai 12 thirumuRais

| | Song | பாடல் | thirumuRai Reference |
|---|---|---|---|
| 01 | pUvAr malarkoNdu | பூவார் மலர்கொண்டு | 1.69.1 (# 743) |
| 02 | indRu ~nandRu ~nALai | இன்று நன்று நாளை | 2.99.1 (# 2539) |
| 03 | AdinAy ~naRu~neyyodu | ஆடினாய் நறுநெய்யொடு | 3.1.1 (# 2801) |
| 04 | puzhuvAyp piRakkinum | புழுவாய்ப் பிறக்கினும் | 4.94.8 (# 5078) |
| 05 | ~nandRu ~nALthoRum | நன்று நாள்தொறும் | 5.42.1 (# 5644) |
| 06 | ka~ndha malark kondRai | கந்த மலர்க் கொன்றை | 6.84.4 (# 7079) |
| 07 | ellA ulagamum | எல்லா உலகமும் | 6.38.7 (# 6629) |
| 08 | vadivudai mazhuvE~ndhi | வடிவுடை மழுவேந்தி | 7.85.1 (# 8086) |
| 09 | umbargatku arasE | உம்பர்கட்கு அரசே | 8 - p 566 (pidiththa paththu # 536) |
| 10 | kAraNi kaRpagam | காரணி கற்பகம் | 8 tirukkOvaiyAr 400 |
| 11 | katRavar vizhu~nggum | கற்றவர் விழுங்கும் | 9 - 47 |
| 12 | sollANda surudhipporuL | சொல்லாண்ட சுருதிப்பொருள் | 9 - 292 |
| 13 | anbum sivamum | அன்பும் சிவமும் | 10 - 270 |
| 14 | padhigam Ezhu ezhu~nURu | பதிகம் ஏழு எழுநூறு | 11 - 1415 |
| 15 | ~nacci inthamizh | நச்சி இன்தமிழ் | 12 - 2324 |
| 16 | endRum inbam | என்றும் இன்பம் | 12 - 4281 |

ஸ்தலம் **திருவண்ணாமலை** பாடல் திருஞான சம்பந்தர்
பண்: **தக்கேசி** ராகம்:
திருமுறை # **1.69.1** பாடல் **பூவார் மலர்கொண்டு** # 743

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே.

பூ ஆர் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூ மா மழை நின்று அதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே.

ஸ்தலம் **திருக்கோடிகா** பாடல் திருஞான சம்பந்தர்
பண்: **திருவிராகம்: நட்டராகம்** ராகம்:

| | | | | |
|---|---|---|---|---|
| திருமுறை # | **2.99.1** | பாடல் | **இன்றுநன்று** | # 2539 |

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்று இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

இன்று நன்று நாளை நன்று என்று நின்று இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின் தயங்கு சோதியான் வெண் மதி விரி புனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **கோயில்** | பாடல் | **திருஞான சம்பந்தர்** | |
| பண்: | **காந்தார பஞ்சமம்** | ராகம்: | | |
| திருமுறை # | **3.1.1** | பாடல் | **ஆடினாய்நறுநெய்யொடு** | # 2801 |

ஆடினாய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்க-எம் தொல்வினையே.

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறும் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல் கீதமும்
பல் சடைப் பனி கால் கதிர் வெண் திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல் வினையே

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருப்பாதிரிப்புலியூர்** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருவிருத்தம்** | ராகம்: | | |
| திருமுறை # | **4.94.8** | பாடல் | **புழுவாய்ப் பிறக்கினும்** | # 5078 |

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி என் மனத்தே
வழுவாது இருக்க வரம் தர வேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து அருள் செய் பாதிரிப்புலியூர்ச்
செழு நீர்ப் புனல் கங்கை செஞ்சடை மேல் வைத்த தீ வண்ணனே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவேட்களம்** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருக்குறுந்தொகை** | ராகம்: | | |
| திருமுறை # | **5.42.1** | பாடல் | **நன்று நாடொறும்** | # 5644 |

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

நன்று நாள்தொறும் நம் வினை போய் அறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர் திருவேட்களத்துள் உறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருச்செங்காட்டங்குடி** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருத்தாண்டகம்** | ராகம்: | | |
| திருமுறை # | **6.84.4** | பாடல் | **கந்தமலர்க் கொன்றை** | # 7079 |

கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
        கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்
        சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
        பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
        செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

கந்த மலர்க் கொன்றை அணி சடையான்தன்னைக்
        கதிர் விடு[ம்] மா மணி பிறங்கு கனகச் சோதிச்
சந்த மலர்த் தெரிவை ஒரு பாகத்தானைச்
        சராசர நல் தாயானை நாயேன் முன்னைப்
பந்தம் அறுத்து ஆள் ஆக்கிப் பணிகொண்டு ஆங்கே

பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்து என்
சிந்தை மயக்கு அறுத்த திருவருளினானைச்
செங்காட்டங்குடி அதனில் கண்டேன் நானே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருவையாறு** | பாடல் | **திருநாவுக்கரசர்** | |
| பண்: | **திருத்தாண்டகம்** | ராகம்: | | |
| திருமுறை # | **6.38.7** | பாடல் | **எல்லாவுலகமுமா** | # 6629 |

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொன் சோதீ.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திருக்கூடலையாற்றூர்** | பாடல் | **சுந்தரர்** | |
| பண்: | **புறநீர்மை** | ராகம்: | **பூபாளம்** | |
| திருமுறை # | **7.85.1** | பாடல் | **வடிவுடை மழுவேந்தி** | # 8086 |

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

வடிவு உடை மழு ஏந்தி மத கரி உரி போர்த்துப்
பொடி அணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடி அணி நெடு மாடக் கூடலையாற்றூரில்

அடிகள் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **பிடித்த பத்து (முத்திக் கலப்பு உரைத்தல்)** | பாடல் | **மாணிக்கவாசகர்** | |
| பண்: | | ராகம்: | | |
| திருமுறை # | **8 திருவாசகம்** | பாடல் | உம்பர்கட்கு அரசே | # 536 |

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

உம்பர்கட்கு அரசே ஒழிவு அற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்து என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீர் உடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம் பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே.

**மாணிக்க வாசகர் அருளியது**
**திருக்கோவையார் (திருச்சிற்றம்பலக் கோவையார்)**
கட்டளைக் கலித்துறை யாப்பு
இருபத்தைந்தாம் அதிகாரம்
25. பரத்தையிற் பிரிவு
49. ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல்
காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணர்ஒக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க்(கு) ஊரன்மற்(று) யாவர்க்கும் ஊதியமே. ... 400

**ஒன்பதாம் திருமுறை**

**2. சேந்தனார் அருளிய திருவிசைப்பா**
**1. திருவீழிமிழலை**
47.
கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. 2

**ஒன்பதாம் திருமுறை**
**10. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு**
292.
சொல்லாண் டசுரு திருப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிறை(/த?)யும்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 4

திருமந்திரம்
முதல் தந்திரம்
18.. அன்புடைமை
270.
அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 1

**பதினோராம் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)**
**12.10 நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த**
**திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை**

1415 பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்

அதிகைமா நகர்மேவி அருளினால் அமண்மூடர்

அவர்செய்வா தைகள்தீரும் அனகன்வார் கழல்சூடின் 7

நிதியரா குவர்சீர்மை உடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவர்ஈசன் அடியரா குவர்வானம்
உடையரா குவர்பாரில் மனிதரா னவர்தாமே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | | பாடல் | **சேக்கிழார்** | |
| பண்: | | ராகம்: | | |
| திருமுறை # | **12** திருத்தொண்டர் புராணம் **(பெரிய புராணம்)** | பாடல் | **நச்சி இன்தமிழ்** | # 2324 |

நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவரின் னருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகன் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்னா யிரக்கிழி ஒன்று.

நச்சி இன் தமிழ் பாடிய ஞான சம்பந்தர்
இச்சையே புரிந்து அருளிய இறைவர் இன் அருளால்
அச் சிறப்பு அருள் பூத[ம்] முன் விரைந்து அகன் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக் கிழி ஒன்று.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | | பாடல் | **சேக்கிழார்** | |
| பண்: | | ராகம்: | | |
| திருமுறை # | **12** திருத்தொண்டர் புராணம் **(பெரிய புராணம்)** | பாடல் | **என்றும் இன்பம்** | # 4281 |

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று உ[ள்]ளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகு எ[ல்]லாம்.